[6th February 1959

SRI C. MUTHIAH : பயிர்ச்சி பெற்றவர்களில், பயிர்ச்சி முடிந்த பிறகு தேர்வு காலத்தில் தேர்வு அடையாமல் இருக்கிறவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய சர்க்கார் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பாஸ் பண்ணுகிறவர்களுக்குத் தான் உதவி செய்ய முடியும். பாஸ் பண்ணாதவர்களுக்கு எப்படி உதவி செய்வது ? யாராக இருந்தாலும் சரி வேலைக்கு எடுத்துக்கொள்ள தகுதியுள்ளவர்களாக இருந்தால் தான் அவர்களுக்கு உதவி அளிக்க முடியுமே யொழிய தகுதியில்லாதவர்களுக்கு உதவி செய்வது என்பது முடியாது. அவர்கள் பாஸ் செய்யவில்லை என்றால் அவர்கள் வேலைக்கு லாயக்கு இல்லை என்றுதான் அர்த்தம்.

SRI V. SUBBIAH : அரசாங்க காதி இலாக்காவிலுள்ள பிற்பட்ட ஊழியர்களுக்கும் இம்மாதிரி சலுகைகள் அளிக்கப்படுகிறதா ? முக்கியமாக காதி இலாகாவிலுள்ளவர்களிலும் பல தியாகிகள் அவர்கள் குழந்தைகள் தான் இருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பது. காதி இலாக்காவில் இருக்கிறவர்கள் என்றால் அவர்களுக்கு ஏற்கனவே வேலை இருக்கிறது. அதனால் அவர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுப்பதைப்பற்றி ஒன்றும் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, do the Government of Madras get any subsidy from the Union Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, with regard to stipend, we get.

Aided elementary school for South Alangulam village

* 44 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a representation was received from South Alangulam village, Anaiyur Post, Madurai taluk, Madurai district, about the opening of an aided elementary school; and

(*b*) if so, what action has been taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Permission was refused.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know, Sir, the reasons why permission was refused?

THE HON. SRI C. SUBRAMANIAM : Permission was refused on the ground that there were already two schools within a radius of one mile from there.

SRI J. MATHA GOWDER : தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக ஒரு பள்ளிக்கூடத்திற்கு மேல் ஒருவருக்கு கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு ஏதாவது இருக்கிறதா ? அப்படி என்றால் ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி ஆலங்குளம் சம்பந்தப்பட்டது. அதனால் வேறு கேள்வி போட வேண்டும்.